

# வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!**
(சங்கீதம் 119:105)

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**வியாழன்தோறும்**

| 20.06.2024 | **25. குணசாலியான ஸ்திரீயின் உத்தம பண்புகள்!** |
|---|---|



*அவள், இயேசுவின் பாதத்தில் அமர்ந்து நல்ல பங்கை பெறும்*
பெத்தானிய மேரியின் ஆவி கொண்டவள்!

*கணவனுக்கு பயபக்தியுடன் கீழ்படியும்*
சாராவின் அழகுடையவள்!

*சீறிவந்த சத்துருவின் சீற்றங்களை நேர்கொள்ளும்*
தெபோராவின் தைரியமுடையவள்!

*அறியப்படாத தேசத்திற்கும் அடியெடுத்து வைத்திடும்*
ரூத்தைப்போல் தேவ நம்பிக்கை நிறைந்தவள்!

*பெற்றபிள்ளையை தேவ தீர்மானத்தின்படி கர்த்தருக்கு தந்திடும்*
அன்னாளின் அர்ப்பணிப்பு மிகுந்தவள்!

*கர்த்தருடைய மகிமைக்கென்றே தன் பிள்ளைகளை வளர்த்திட*
யோகெபேத் போன்று தத்தம் செய்தவள்!

*கிறிஸ்துவுக்காக அவரது சபைக்காக தன் பிள்ளைகளைக் கட்டி எழுப்பும்*
ஐனிக்கேயாளின் உறுதி கொண்டவள்!

*அடுத்தடுத்த சந்ததிக்கு விசுவாசத்தை வைத்துச் செல்லும்*
லோவிசாளின் உத்தமம் கொண்டவள்!

*எண்ணற்ற விசுவாசிகளின் தேவை அனைத்திற்கும்*
தொற்காளின் மனதுருக்கம் கொண்டவள்!

*தன் குடும்பத்திற்கும் சபைக்கும் குறிப்பறிந்து உதவிடும்*
பெபேயாளின் ஊழிய இதயம் கொண்டவள்!

*பரிசுத்தவான்களின் உபசரிப்பிற்கும், மனப்பூர்வ திறந்த வாசலுக்கும்*
லீதியாளின் மனதைக் கொண்டவள்!

*உயிருள்ள மாதிரியாய் வாழ்ந்து காட்டும் இவளே,*
நீதிமொழிகள் 31 – ன் குணசாலியான ஸ்திரீயானவள்!

**– ரத்னம்**